உ

முருகன் துணை

குருபாததாசர் அவர்களால் செய்தருளிய

திருப்புல்வயல்

குமரேச சதகம்



விவேகாநந்தா அச்சகம்,

40, தளவாய்த் தெரு, : : மதுரை.

உ

சிவமயம்

குமரேச சதகம்

காப்பு.

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமே வியசதகஞ் செப்பவே—கோமேவிக்
காக்குஞ் சரவணத்தான் கம்பகும்பத்தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

அவையடக்கம்

மாரிக்கு நிகரென்று பனிசொரிதல் போலவு
மினைக்குநிக ரென்று சிறுபெண்
மணல்வீடு கட்டுவது போலவுஞ் சந்திரன்முன்
மருவுமின் மினிபோ லவும்
பாருக்கு ணல்லோர்மு னேபித்தர் பலமொழி
பகர்ந்திடுஞ் செயல் போலவும்
பச்சைமயி லாடுதற் கிணையென்று வான்கோழி
பாரிலா டுதல் போலவும்
பூரிக்கு மினியகா வேரிக்கு நிகரென்று
போதுவாய்க் கால் போலவும்
புகல்சிப்பி முத்துக்கு நிகராப் பளிங்கைப்
பொருந்த வைத்தது போலவும்
வாரிக்கு முன்வாவி பெருகல்போ லவுமின்சொல்
வாணர்மு னுகந்து புல்லை
வாலகும ரேசர்மேற் சதகம் புகன்றனன்
மனம்பொறுத் தருள் புரிவையே.

நூல்

1. குமரேசர் மகிமை

பூமிக்கொ ராறுதலை யாய்வந்து சரவணப்
பொய்கைதனில் விளையா டியும்
புனிதர்க்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும்
போதனைச் சிறையில் வைத்தும்

தேமிக்க வரிகரப் பிரமாதி கட்குஞ்
செருக்கமுடி யாவ சுரனைத்
தேகங் கிழித்துவடி வேலினு லிருகூறு
செய்தமரர் சிறைதவிர்த் ததும்

நேமிக்கு ளன்பரிட ருற்றசம யந்தனி
னினைக்குமுன் வந்து தவியும்
நிதமுமெய்த் துணையாய் விளங்கலா லுலகிலுனை
நிகரான தெய்வ முண்டோ

மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி
மார்பனே வள்ளி கணவா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

2. அந்தண ரியல்பு

குறையாத காயத்ரி யாதிசெப மகிமையுங்
கூறுசுரு திப் பெருமையுங்
கோதிலா வாகமபு ராணத்தின் வளமையுங்
குலவுயா காதி பலவும்

முறையா நடத்தலாற் சகலதீ வினைகளையு
முளரிபோ லேதகிப்பார்.
முதன்மைபெறு சிலைசெம்பு பிருதுவிக ளிற்றெய்வ
மூர்த்தமுண் டாக்கு விப்பார்

நிறையாக நீதிநெறி வழுவார்க ளாகையால்
நீள்மழை பொழிந் திடுவதும்
நிலமது செழிப்பது மரசர்செங் கோல்புரியு
நிலையுமா தவர்செய் தவமும்

மறையோர்க ளாலே விளங்குமிவ் வுலகத்தில்
~~வள்ளிக் கிசைந்த கணவா!~~
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே

3. அரசரியல்பு

குடிபடையி லபிமான மந்திரா லோசனை
குறிப்பறிதல் சத்ய வசனங்

கொடைமிகுத்த மலரவர்க் கேற்றமரி யாதைபொறை
கோடாத சதுரு பாயம்

படிவிசா ரணையொடு ப்ரதானிகள கர்த்தரைப்
பண்பறிந் தேய மைத்தல்
பல்லுயிரெ லாந்தன் னுயிர்க்குநிக ரென்றே
பரித்தல்குற் றங்கள் களைதல்

துடிபெறு தனக்குறுதி யானநட் பகமின்மை
சுகுணமொடு கல்வி யறிவு
தோலாத காலமிட மறிதல்வினை வலிகண்டு
துஷ்டநிக் ரக சௌரியம்

வடிவுபெறு செங்கோ னடத்திவரு மரசர்க்கு
வழுவாத முறைமை யிதுகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே

4. வணிக ரியல்பு

கொண்டபடி போலும்விலை பேசிலா பஞ்சிறிது
கூடிவர நபமுறைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம் வராதபடி
குறுகவே செலவு செய்வார்

வண்டப் புரட்டர்தா முறிதந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீந் திடார்
மருவு நாணயமுளோர் கேட்டனுப் புகினுமவர்
வார்த்தையி லெலாங்கொ டுப்பார்

கண்டெழுது பற்றுவர வினின்மயிர் பிளந்தே
கணக்கிலணு வாகிலும் விடார்
காசுவீ ணிற்செலவி டாருசித மானதிற்
கனதிரவி யங்கள் விடுவார்

மண்டலத் தூடுகன வர்த்தகஞ் செய்கின்ற
வணிகர்க்கு முறைமை யிதுகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

5. வேளாள ரியல்பு

நல்லதே வாலயம் பூசனை நடப்பதுவு
நாடோறு மன்னுபொழிவ தும்
நாடிய தபோதனர்கண் மாதவம் புரிவதுவு
நவில்வேத வேதிய ரெலாஞ்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதுந்
தொல்புவி செழிக்கு நலமுஞ்
சுபசோப னங்களுங் கொற்றவர்கள் செங்கோல்
துலங்குமநு நெறி முறைமையும்
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
விற்பனையு மதிக புகழும்
மிக்கவதி காரமுந் தொழிலாளர் சீவனமும்
வீரரண சூர வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவ தன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

6. பிதாக்கள்

தவமதுசெய் தேபெற் றெடுத்தவன் முதற்பிதா
தனைவளர்த் தவனொரு பிதா
தயையாக வித்தையைச் சாற்றினவ னொருபிதா
சார்ந்தசற் குருவொரு பிதா
அவமறுத் தாள்கின்ற வரசொரு பிதாநல்ல
வாபத்து வேளை தன்னி
லஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ ரொருபிதா
வன்புளமு னோனொரு பிதா
கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா
கலிதவிர்த் தவனொரு பிதா
காசினியி லிவரைநித் தம்பிதா வென்றுளங்
கருதுவது நீதி யாகும்
மவுலிதனின் மதியரவு புனைவிமல ருதவுசிறு
மதலையென வருகுரு பரா

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

7. ஒன்றை யொன்று பற்றி யிருப்பன

சத்தியர் தவறு திருப்பவ ரிடத்தினிற்
சார்ந்துதிரு மாதிருக் குஞ்
சந்ததந் திருமா திருக்கும விடந்தனிற்
றனதுபாக் கியமிருக் கும்
மெய்த்துவரு பாக்கிய மிருக்கும் விடந்தனில்
விண்டுவின் களையிருக் கும்
விண்டுவின் களைபூண் டிருக்கும விடந்தன்னில்
மிக்கான தயையிருக் கும்
பத்தியுட னினியதயை யுள்ளவ ரிடந்தன்னிற்
பகர்தரும மிகவிருக் கும்
பகர்தரும முள்ளவ ரிடந்தனிற் சத்துரு
பலாயனத் திறலிருக் கும்
வைத்திசை மிருந்ததிற லுள்ளவ ரிடத்தில்வெகு
மன்னுயிர் சிறக்கு மன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

8. இவர்க் கிவர் தெய்வமெனல்

ஆதுலர்க் கன்னங் கொடுத்தவர்க ளேதெய்வ
மன்பான மாணுக் கருக்
கரியகுரு வேதெய்வ மஞ்சினோர்க் காபத்
தகற்றினோ னேதெய்வ மாம்
காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாங்
கணவனே மிக்கதெய்வங்
காசினியின் மன்னுயிர் தமக்கெலாங் குடிமரபு
காக்குமன் னவர்தெய்வ மாம்
ஓதரிய பிள்ளைகட் கன்னைதந் தையர்தெய்வ
முயர்சாதி மாந்தர் யார்க்கு
முறவின்முறை யார்தெய்வம் விசுவாசமுள்ளபேர்க்
குற்றசிவ பத்தர் தெய்வம்

மாதையயி லுலடியர்க் கன்புசெய் வோர்தெய்வம்
வானவர்க் குத்தெய்வ நீ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

9. இவர்க்கு இதில் நினைவெனல்

ஞானநெறி யாளர்க்கு மோக்ஷத்தி லேநினைவு
நல்லறிவு ளோர் தமக்கு
நாடொறுந் தருமத்தி லேநினைவு மன்னர்க்கு
ராச்சியந் தன்னி னினைவு
ஆனகா முகருக்கு மாதர்மே லேநினைவு
அஞ்சாத திருடருக் கிங்
கனுதினங் களவிலே நினைவுதன வணிகருக்
காதாய மீது நினைவு
தானமிகு குடியாள ருக்கெலாம் வேளாண்மை
தனினினைவு கற்ப வர்க்குத்
தருகல்வி மேனினைவு வேசியர்க் கினியபொருள்
தருவோர்கண் மீது நினைவு
மானபர னுக்குமரி யாதைமே னினைவெற்கு
மாறுநின் மீது நினைவு
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

10. இவர்க்கிது இல்லையெனல்

வேசைக்கு நிசமில்லை திருடருக் குறவில்லை
வேந்தற்கு நன்றி யில்லை
மிடியற்கு விலைமாதர் மீதுவங் கணமில்லை
மிலேச்சற்கு நிறைய தில்லை
ஆசைக்கு வெட்கமிலை ஞானியா னவனுக்கு
ளகமில்லை மூர்க்கன் றனக்
கன்பில்லை காமிக்கு முறையில்லை குணமிலோர்க்
கழகில்லை சித்த சுத்தன்
பூசைக்கு நவிலங்க சுத்தியிலை யாவுமுணர்
புலவனுக் கயலோ ரிலை

புல்லனுக் கென்றுமுசி தானுசித மில்லைவரு
புலையர்க் கிரக்க மில்லை
மாசைத் தவிர்ந்தமதி முகதெய்வ யானையொடு
வள்ளிக் கிசைந்த வழகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

11. இப்படிப்பட்டவ ரிவரெனல்

நியாயநெறி தவறும லுலகபரி பாலன
நடத்துமவ னேயரச னும்
ராசயோ சனைதெரிந் துறுதியா கியசெய்தி
நவிலுமவ னேமந் திரி
நேயமுட னேதன் சரீரத்தை யெண்ணுத
நிர்வாகி யேசூர னும்
நிலைபெறு மிலக்கண மிலக்கிய மறிந்துசொலு
நிபுணகவி யேகவிஞ னும்
ஆயதொரு வாகடந் தாதுவி னிதானமு
மறியுமதி யோன் வைத்தியன்
அகமின்றி மெய்புணர்ந் தைம்புல னொழித்துவிட்
டவனேமெய்ஞ் ஞானி யெனலாம்
மாயவர் சகோதரி மனோன்மணிக் கன்பான
வரபுத்ர வடிவேல வா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

12. விரைந்து அடக்கத் தகுவன இவையெனல்

அக்கினியை வாய்முந்து துர்ச்சனரை வஞ்சமனை
யாளைவளர் பயிர்கொள் களையை
யஞ்சாவிரோதிகளை யனியாயமுடையோரை
யகிர்த்தியப் பெண்க ளார்ப்பைக்
கைக்கினிய தொழிலாளி யைக்கொண்ட வடிமையைக்
களவுசெய் யுந் திருடரைக்
கருதிய விசாரத்தை யடக்கமில் பலிசையைக்
கடிதான கோபந் தனை

மெய்க்கினித லாப்பிணியை யலையுதா சீனத்தை
 வினைமூண் டிடுஞ் சண்டையை
 விஷமேறு கோரத்தை யன்றடக் குவதலான்
 மிஞ்சவிட லாகாது காண்
மைக்கினிய கண்ணிகுற வள்ளிதெய் வானையை
 மணஞ்செய்த பேரழக னே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

13. இவர்க்கிது துரும்பெனல்

தாரான மாகக் கொடுக்குந் தியாகிக
 டமக்குநற் பொருள் துரும்பு
 தன்னுயிரை யெண்ணாத சூரனுக் கெதிராளி
 தளமெலா மொரு துரும்பு
பேரான பெரியருக் கற்பாது கையினிற்
 பிரயோச னந் துரும்பு
 பெரிதான மோக்ஷசிந் தனையுள் ளவர்க்கெலாம்
 பெண்போக மொரு துரும்பு
தீராத சகலமும் வெறுத்ததுற விக்குவிறல்
 சேர்வேந்த னொரு துரும்பு
 செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாஞ்
 செந்தமிழ்க் கவி துரும்பாம்
வாராரு மணிகொள்தன வள்ளிதெய் வானையை
 மணம்புணரும் வடிவேல வா!
 மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேச னே.

14. இதனை விளக்குவ திதுவெனல்

பகல்விளக் குவதிரவி நிசிவிளக் குவதுமதி
 பார்விளக் குவது மேகம்
 பதிவிளக் குவதுபெண் குடிவிளக் குவதாசு
 பரிவிளக் குவது வேகம்
இகல்விளக் குவதுவலி நிறைவிளக் குவதுநல
 மிசைவிளக் குவது சதியூ

ரிடம்விளக் குவதுகுடி யுடல்விளக் குவதுண்டி
யினியசொல் விளக்குவ தருள்
புகழ்விளக் குவதுகொடை தவம்விளக் குவதறிவு
பூவிளக குவது வாசம்
பொருள்விளக் குவதுதிரு முகம்விளக் குவதுகை
புத்தியை விளக்குவது நூல்
மகம்விளக் குவதுமறை சொல்விளக் குவதுநிசம்
வாவியை விளக்குவது நீர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

15. பிறப்பிட நன்மையால் நன்மை பெறுமை

சிங்கார வனமதி லுதிப்பினுங் காகமது
தீஞ்சொல்புகல் குயிலாகு மோ
திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
செங்கஞ்ச மலராகு மோ
அங்கான கத்திற் பிறந்தாலு முயலான
தானையின் கன்றாகு மோ
ஆண்மையா கியநல்ல குடியிற் பிறந்தாலு
மசடர்பெரி யோராவ ரோ
சங்காடு பாற்கடல் பிறந்தாலு நத்தைதான்
சாலக்கி ராம மாமோ
தடமேவு கடனீரி லேயுப்பு விளையினுஞ்
சாரசர்க் கரையாகு மோ
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
வைத்தமெய்ஞ் ஞான குருவே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

16. பலர்க்கும் பயன்படுவன

கொண்டல்பொழி மாரியு முதாரசற் குணமுடைய
கோவுமூ ருணியி னீருங்
கூட்டமிடு மம்பலத் தருதருவி னீழலுங்
குடியாளர் விவசாய மும்

கண்டவர்க ளெல்லாம் வரும்பெருஞ் சந்தியிற்
கனிபல பழுத்த மாமுங்
கருணையுட னேவைத் திடுந்தணீர்ப் பந்தலுங்
காவேரி போலூற்ற மும்
விண்டலத் துறைசந்தி ராதித்த கிரணமும்
வீசுமா ருத சீதமும்
விவேகியெனு நல்லோ ரிடத்திலுறு செல்வமும்
வெகுசனர்க் குபகார மாம்
வண்டிமிர் கடப்பமலர் மாலையணி செங்களப
மார்பனே வடிவேல வா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

17. தாமழியினுங் குணமழியாதவை

தங்கமா னதுதழலி னின்றுருகி மறுகினுந்
தன்னொளி மழுங்கி டாது
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமோ
தன்மணங் குன்றி டாது
பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமோ
பொலிவெண்மை குறை வுறாது
போதவே காய்ந்துநன் பால்குறுகி னாலும்
பொருந்துசுவை போய் விடாது
துங்கமணிசாணையிற் றேய்ந்துவிட் டாலுந்
துலங்குகுண மொழியாது பின்
றுன்மைதரு பெரியோர் மடிந்தாலு மவர்களது
தூயநிறை தவறுகு மோ
மங்களகல் யாணிகுற மங்கைசுர குஞ்சரியை
மருவுதிண் புயவாச னே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

18. நரகில் வீழ்வோர்

மன்னரைச் சமரில்விட் டோடினவர் குருமொழி
மறந்தவர் கொலைப் பாதகர்

மாதா பிதாவையிழ் நித்தவர்கள் பாதார
மருவித் திரிந்த பேர்கள்
அன்னங் கொடுத்தபே ருக்கழிவை யெண்ணினோ
ராசடக் கிய வமைச்ச
ராலய மிகழ்ந்தவர்கள் விசுவாச காதக
ருந்தவர் தமைப்பழித் தோர்
முன்னுதவி யாய்ச்செய்த நன்றியை மறந்தவர்
முகஸ்துதி வழக் குரைப்போர்
முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினத்தவர்கண்
முழுதும்பொய் யுரைசொல்லு வோர்
மன்னொருவர் வைத்தபொரு ளபகரித் தோரிவர்கண்
மாநரகில் வீழ்வ ரன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

19. சரீர சுகம்

மாதத்திரண்டுவிசை மாதரைப் புல்குவது
மறுவறுவி ரேசனந் தான்
வருஷத் திரண்டுவிசை தைலந் தலைக்கிடுதல்
வாரத் திரண்டு விசையாம்
மூதறிவி னொடுதனது வயதினுக் கிளையவொரு
மொய்குழ லுடன்சை யோகம்
முற்றுதயிர் காய்ச்சுபா னீர்மோ ருருக்குநெய்
முதிரா வழுக்கை யிளநீர்
சாதத்தி லெவ்வளவா னாலும் புசித்தபின்
றாகந் தனக்கு வாங்கல்
தயையாக வுண்டபி னுலாவலிவை மேலவர்
சரீரசுக மாமென்பர் காண்
மாதவ குமாரிசா ரங்கத் துதித்தகுற
வள்ளிக் குகந்த சரசா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

20. யார்க்கு மனுபோகம் விடாமை

தேசுபெறு மேருப்ர தக்ஷணஞ் செய்துமதி
தேகவடு நீங்கவில்லை
திருமா லுறங்கிடுஞ் சேடனுக் குவணன்
செறும்பகை யொழிந்த தில்லை

ஈசன் கழுத்திலுறு பாம்பினுக் கிரைவே
றிலாமலே வாயு வாகு
மினியகண் ணாகிவரு பரிதியா னவனுக்
கிராகுவோ கனவி ரோதி

ஆசிலாப் பெரியோ ரிடத்தினி லடுக்கினு
மமைத்தபடி யன்றி வருமோ
அவரவர்க ளனுபோக மனுபவித் திடல்வேண்டு
மல்லால் வெறுப்ப தெவரை

வாசவனு மும்பரனை வரும்விசய சயவென்று
வந்துதொழு தேத்து சரணா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

21. இதுவின்றி இது சிறவாதெனல்

குருவிலா வித்தைகூ றறிவிலா வாணிபங்
குணமிலா மனைவி யாசை
குடிநல மிலாநாடு நீதியில் லாவரசு
குஞ்சரமி லாத வெம்போர்

திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவந்
தியானமில் லாத நிஷ்டை
தீபமில் லாதமனை சோதரமி லாதவுடல்
சேகரமி லாத சென்னி

உருவிலா மெய்வளமை பசியிலா வுண்டிபுக
லுண்மையில் லாத வசனம்
யோசனையி லாமந்த்ரி தைரியமி லாவீர
முதவியில் லாத நட்பு

மருவிலா வண்ணமலர் பெரியோ ரிலாதசபை
வையத் திருந்தென் பயன்

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

22. பகைக்கத் தகாதவ ரிவரெனல்

அரசர்பகை யுந்தவம் புரிதபோ தனர்பகையு
மரியகரு ணீகர் பகைய
மடுத்துக் கெடுப்போர் கொடும்பகையு முட்பகையு
மருளிலாக் கொலைஞர் பகையும்
விரகுமிகு மூரிலுள் ளோருடன் பகையுமிகு
விகடப்ர சங்கி பகையும்
வெகுசனப் பகையுமந் திரவாதி யின்பகையும்
விழைமருத் துவர்கள் பகையும்
உரமருவு கவிவாணர் பகையுமா சான்பகையு
முறவின்முறை யார்கள் பகைய
முற்றதிர வியமுளோர் பகையமந் திரிபகையு
மொருசிறிது மாகாது காண்
வரநதியின் மதலையென வினியசா வணமிசையில்
வருதருண சிறு குழவியே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

23. பேயெனப்படுவோ ரிவரெனல்

கடனுதவு பேர்வந்து கேட்கும்வே ளையின்முகங்
கடுகடுக் கின்ற பேயுங்
கனமருவு பெரியதனம் வந்தவுட னிறுமாந்து
கண்விழிக் காத பேயும்
அடைவுடன் சத்துருவின் பேச்சைவிசு வாசித்
தகப்பட் டுழன்ற பேயு
மாசைமனை யாளுக்கு நேசமா யுண்மைமொழி
யானதை யுரைத்த பேயும்
இடரிலா நல்லோர்கள் பெரியோர்க ளைச்சற்று
மெண்ணா துரைத்த பேயு
மினியபரி தானத்தி லாசைகொண் டொருவற்
கிடுக்கண்செய் திட்ட பேயும்

மடமனை யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும்
வசைபெற்ற பேய்க ளன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே

24. அவ்வவ்வினத்தி லுயர்ந்தவை

தாருவிற் சந்தான நதியினிற் கங்கைவிர
தத்தனிற் சோம வாரந்
தலைபெறு நிலத்தினிற் காஸ்மீர கண்டந்
தலத்திற் சிதம்பர தலம
சீருலவு ரிஷிகளில் வசிட்டர்பசு விற்காம
தேனுமுனி வரினா ரதன்
செல்வநவ மணிகளிற் றிகழ்பதும ராகமணி
தேமலரி லம்போ ருகம்
பேருலவு கற்பினி லருந்ததி கதித்திடு
பெலத்தின்மா ருதம் யானையிற்
பேசிலை ராவதந் தமிழினி லகத்தியம்
பிரணவம் மந்திரத் தில்
வாரிதியி லேதிருப் பாற்கடல் குவட்டினின்
மகாமேரு வாகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

25. அவரவர்க்குப் பெலமாவன

அந்தணர்க் குயர்வேத மேபெலங் கொற்றவர்க்
கரியசௌ ரியமே பெல
மானவணி கர்க்குநிதி யேபெலஞ் சூத்திரர்க்
காயினே ருழவே பெலம்
மந்திரிக் குச்சதுரு பாயமே பெலநீதி
மானுக்கு நடுவே பெலம்
மாதவர்க் குத்தவசு பெலமடவி யர்க்குநிறை
மானமிகு கற்பே பெலம்

தந்திர மிகுத்தகன சேவகர் தமக்கெல்லாஞ்
சாமிகா ரியமே பெலஞ்
சான்றவர்க் குப்பொறுமை யேபெலம் புலவோர்
தமக்குநிறை கல்வி பெலமாம்
வந்தனை செயும்பூசை செய்பவர்க் கன்புபெலம்
வாலவடி வான வேலா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

26. இருந்தும் பயன்படாதவை

தருணத்தி லுதவிசெய் யாதநட் பாளர்பின்
தந்தென தாரம லென்ன
தாராதர மறிந்துமுறை செய்யாத மன்னரைச்
சார்ந்தென்ன நீங்கி லென்ன
பெருமையுட னுண்மையில் லாதவொரு பிள்ளையைப்
பெற்றென பெறாம லென்ன
பிரியமா யுள்ளன்பி லாதவர்க ணேசம்
பிடித்தென விடுக்கி லென்ன
தெருளாக மானமில் லாதவொரு சீவனஞ்
செய்தென செயாமலென்ன
தேகியென வருபவர்க் கீயாத செல்வஞ்
சிறந்தென முறிந்து மென்ன
மருவிளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு
வந்தென வராம லென்ன
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

27. உபகார மில்லாதவை.

கடனீர் மிகுந்தென்ன வொதிதான் பெருத்தென்ன
காட்டிலவு மலரி லென்ன
கருவேல் பழுத்தென்ன நாய்ப்பால் சுரந்தென்ன
கானில்மழை பெய்து மென்ன
அடர்கழுதை லத்திரில மெல்லாங் குவிந்தென்ன
அரியகுண மில்லாத பெண்

ணழகா யிருந்தென்ன வாஸ்தான கோழைபல
அரியநூலோதி யென்ன
இடமினிய பூதம்வெகு பொன்காத் திருந்தென்ன
திறன்மிகுங்கரடி மயிர்தான்
செறிவாகி நீண்டென்ன வஷ்த்ரபூஷணமெலாஞ்
சித்திரத் தூற்று மென்ன
மடமிகுந் தெவருக்கு முபகார மில்லாத
வம்பர்வாழ் வுக்கு நிகராம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

28. பதரெனப் படுவோர்.

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர்
சமர்கண் டொளிக்கும் பதர்
தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர்தோழர்
தம்மொடு சலிக்கும் பதர்
பின்புகா ணாவிடந் தன்னிலே புறணிபல
பேசிக் களிக்கும் பதர்
பெற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர்
பெண்புத்திகேட்கும் பதர்
பொன்பண மிருக்கவே போயிரக் கின்றபதர்
பொய்ச்சாட்சி சொல்லும் பதர்
புவியோர் நடத்தையை யிகழ்ந்தபதர் தன்மனைவி
புணர்தல்வெளி யாக்கும் பதர்
மன்புணரும் வேசையுடன் விபசரிக் கின்றபதர்
மனிதரிற் பதரென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

29. காணாவிடியற் றுயரப்படுபவை.

இரவிகா ணாவனச மாரிகா ணாதபயி
ரிந்துகா ணாத குமுத
மேந்தகல்கா ணாநாடு கரைகள்கா ணாவோட
மின்சொல்கா ணாவி ருந்து

சாபிகா ணுதகன் றன்னைகா ணுமதலை
சோலைகா ணுத வண்டு
தோழர்கா ணுகேயர் கலைகள்கா ணுதமான்
சோடுகா ணுத பேடு
குரவர்கா ணுதசபை தியாகிகா ணுவறிஞர்
கொழுநர்காணுத பெண்கள்
கொண்டால்கா ணுத மயில் சிறுவர்கா ணுவாழ்வு
கோடைகா ணுதகுயில்கள்
வாவுகா ணுதசெல விவையெலாம் புவிமீதில்
வாழ்வுகாணுவிளமையாம்
மயிலேறிவிளையாடு குகனே புல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

30. வியாதி மூலங்கள்.

கல்விஞன் மயிரிஞன் மீதூண் விரும்பலாற்
கருதிய விசாரத்திஞற்
கடுவழி நடக்கையான் மலசல மடக்கையாற்
கனிபழங் கறியுண்ணலால்
நெல்விஞ லுமியிஞ லுண்டபின் மூழ்கலா
னித்திரைக ளில்லாமை யா
னீர்ப்பகையி ஞற்பனிக் காற்றிலுட ஞேதலா
னீடுசரு கிலையூற லால்
மெல்விநல் லார்கலவி பதிகமுள் விரும்பலால்
வீழ்மலஞ் சிக்குகையி ஞன்
மிகுசுமை யெடுத்தலா விளவெயிற் காய்தலான்
மெய்வாட வேலை செயலால்
வல்லிரவி லேதயிர்கள் சருகாதி யுண்ணலால்
வண்பிணிக் கிடமென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

31. செத்துஞ் சாகாதவர்.

அனைவர்க்கு முபகார மாம்வாவி கூவமுண்
டாக்கிஞேர் நீதி மன்ன

ரழியாத தேவால யங்கட்டி வைத்துளோ
ரகங்கள் செய்த பெரியோர்

துனையொப்பி லாப்புதல்வ னைப்பெற்ற பேர்பொருது
சமர்வென்ற சுத்த வீரர்
தரணிதனி னிலைநிற்க வெந்நாளு மாறாத
தருமங்கள் செய்த பேர்கள்

கனவித்தை கொண்டவர்க ளோயாதகொடையாளர்
காவியஞ் செய்த கவிஞர்
கற்பினின் மிகுத்தவொரு பத்தினிமடந்தையைக்
கடிமணஞ் செய்தோர்க ளிம்

மனிதர்கள் சரீ ரங்கள் போகினுஞ் சாகாத
மனிதரிவ ராகு மன்றோ
மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

32. சாகாதிருந்துஞ் செத்தவர்

மாறாத வறுமையோர் தீராத பிணியாளர்
வருவேட் டகத்தி லுண்போர்
மனைவியை வழங்கியே சீவனஞ் செய்குவோர்
மன்னுமொரு ராச சபையில்

ஆறாக நிந்தைசெய் துய்குவோர் சிவிகைகள்
சுமந்தே பிழைக்கின்ற பேர்
தொலையா விசாரத் தழுந்துவோர் வார்த்தையிற்
சோர்வுபட லுற்ற பெரியோர்

வீறாக மனையா டனக்கஞ்சி வந்திடு
விருந்தினை யொழித்துவிடுவோர்
வீம்புடன் செல்லாத விவகார மதுகொண்டு
மிக்கசபை யேறு மசடர்

மாறாக விவரெலா முயிருடன் செத்தசவ
மாகியொளி மாய்வர் கண்டாய்
மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

33. சிறிதும் பயன்படாதவர்.

பதராகி னுங்கன விபூதிவிளை விக்கும்
பழமைபெறு சுவராகி னும்
பலருக்கு மறைவா குமாடுரிஞ் சிடுமலம்
பன்றிகட் குபயோக மாம்
கதமிகு கடாவென்னி லுழுதுபுவி காக்கும்வன்
கழுதையும் பொதி சுமக்குங்
கல்லெனிற் றேவர்களு மாலயமு மரம்பெருங்
கான்புற்று மரவ மனையாம்
இதமிலாச் சவமாகி னுஞ்சிலர்க் குதவிசெயு
மிழிவுறு குரங் காயினு
மிரக்கப் பிடித்தவர்க் குதவிசெயும் வாருகோ
லேற்றமா ளிகை விளக்கும்
மதமது மிகும்பரம லோபரா லுபகார
மற்றொருவ ருக்கு முண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

34. உலுத்த ரியல்பு.

திரவியங் காக்குமொரு பூதங்கள் போற்பணந்
தேடிப் புதைத்து வைப்பர்
சீலநல மாகவுங் கட்டார்க ணல்லமுது
செய்துணா ரறமுஞ் செயார்
புரவலர்செய் தண்டந் தனக்குவலு வாகப்
புகுந்திருட ருக்கு மீவார்
புலவரைக் கண்டவுட னோடிப் பதுங்குவார்
புண்ணியர்க் கொன்று முதவார்
விரகறிந் தேபிள்ளை சோறுகறி தினுமளவில்
வெகுபணஞ் செலவாக லால்
விளையாடு கிழவனும் பிள்ளையே பிள்ளையென
மிகுசெட்டி சொன்ன கதைபோல்
வரவுபார்க் கின்றதே யல்லாது லோபியர்கண்
மற்றொருவ ருக் கீவரோ

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

35. திருவாழிடங்கள்

கடவா ரணத்திலுங் கங்கா சலத்திலுங்
கமலாச னந்தன்னி லுங்
காகுத்தன் மார்பிலுங் கொற்றவ ரிடத்திலுங்
காவியின் கூட்டத்தி லும்
நடமாடு பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத
நல்லோ ரிடந்தன்னி லும்
நல்வசுப லக்ஷண மிகுந்தமனை தன்னிலும்
ரணசுத்த வீரர் பாலும்
அடர்கே தனத்திலுஞ் சுயம்வரந் தன்னிலும்
மருந் துளசி வில்வத் திலு
மலர்தரு கடப்பமலர் தனிலுமிர தத்திலு
மதிகருணை மான ரூப
மடவா ரிடத்திலுங் குடிகொண்டு திருமாது
மாறு திருப்ப ளென்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

36. மூதேவி வாழிடங்கள்.

சோரமங் கையர் கணிச முறையார்கள் வாயினிற்
சூதகப் பெண்க ணிழலில்
சூளையிற் சூல்தலுறு புகையிற் களேபரஞ்
சுடுபுகையி னீசர் நிழலில்
காரிரவி லாசுநிழ லிற்கடா நிழலினெடு
கருதிய விளக்கு நிழலில்
காமுகரி னிஷ்டையில் லாதவர் முகத்திற்
கடுஞ்சினத் தோர் சபையினில்
ஈரமில் லாக்களர் நிலத்தினி லிராத்தயிரி
விழியுமது பானர் பாலி
விலைவேல் விளாநிழலி னிதமழுக் கடைமனையி
லேனகா யசகரத் தாள்

வாரிய முறத்துள் பெருக்குதூண் மூதேவி
மாரு திருப்ப ளெனபார்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயணீடு
மலைமேவு குமரேச னே.

37. திருத்தினுந் திருந்தாதவை.

கட்டியெரு விட்டுச் செழுந்தேனை வார்க்கினுங்
காஞ்சிரங் கைப்பு விடுமோ
கழுதையைக் கட்டிவைத் தோமம் வளர்க்கினுங்
கதிபெறுங் குதிரையாமோ
குட்டியர வுக்கமு தளித்தே வளர்க்கினுங்
கொடுவிட மலாது தருமோ
குக்கனெடு வாலுக்கு மட்டையைக் கட்டினுங்
கோணு மலை நிமிருமோ
ஒட்டியே குறுணிமை யிட்டாலு நயமிலா
யோனிகண் ணுகி விடுமோ
வுலவுகன கர்ப்பூர வாடைபல கூட்டினு
முள்ளியின் குணமாறு மோ
மட்டிகட் காயிரம் புத்திசொன் னாலுமதின்
மார்க்கமறி யாதை வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயணீடு
மலைமேவு குமரேச னே.

38. குறிப்பறிதல்.

மனதிற் கடும்பகை முகத்தினு லறியலா
மாநிலப் பூடுக ளெலாம்
மழையினு லறியலா நல்லார்பொல் லார்தமை
மக்களா லறிய லாகும்
கனமருவு சூரரைச் சமரினு லறியலாங்
கற்றவொரு வித்துவா னைக்
கல்விப்ர சங்கத்தி னுலறிய லாங்குணங்
களைநடையி னுலறிய லாம்
தனதக மடுத்தது பளிங்கினு லறியலாஞ்
சாதிசொல் லாலறியலாம்

தருநிதி கேள்வியா லறியலாம் பிணிகளைத்
தாதுக்க ளாலறிய லாம்
வனசவிக சிதவதன பரிபூர ணனந்த
வாலவடி வான வேலா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

39. குணமாறுமை.

குணமிலாத் துஷ்டமிரு கங்களையு நயகுணங்
கொண்டுட் படுத்தி விடலாங்
கொடியபல விடநோய்க ளியாவுமௌ ஷதமது
கொடுத்துத் திருப்பி விடலாம்
உணர்விலாப் பிரமராட் சசிமுதற் பேய்களை
யுகந்துகூத் தாட்டி விடலாம்
உபாயத்தி னாற்பெரும் பறவைக்கு நற்புத்தி
யுண்டாக்க லாமுயிர் பெறப்
பிணமதை யெழுப்பலா மக்கினி சுடாமற்
பெரும்புன லெனச் செய்யலாம்
பிணியையு மகற்றலாங் காலதூ துவரையும்
பின்புவரு கென்று சொல்லலாம்
மணலையுங் கயிறாத் திரிக்கலாங் கயவர்குண
மட்டுந் திருப்ப வசமோ
மயிலேறி விளையாடு குகனேபல் வயணீடு
மலைமேவு குமரேச னே

40. இத்தீக்குணத்தோரிவ் விலங்குபோல்வரெனல்

தான்பிடித் ததுபிடிப் பென்றுமே வவர்புத்தி
தள்ளிச்செய் வோர் குரங்கு
சபையிற் குறிப்பறிய மாட்டாம னின்றவர்
தாம்பய னிலாத மரமாம்
வீம்பினு லெளியவரை யெதிர்பண்ணி நிற்குமொரு
வெறியர்குரை ஞமலி யாவார்
மிகநாடி வருவோர் முகம்பார்த் திடாலோபர்
மேன்மையில் லாத கழுதை

சோம்பலொடு பெரியோர் சபைக்குட் படுத்திடுந்
    தூங்கலே சண்டிக் கிடா
  சூதுட னடுத்தோர்க் கிடுக்கணே செய்திடுந்
    துஷ்டனே கொட்டு தேளாம்
மாம்பழந் தனைவேண்டி யங்காளி லீசனை
    வலமாக வந்த முருகா!
  மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே.

41. அற்பர் வாழ்வால் குணம் வேறுபடுதல்.

அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமா னல்விழிக்
    கியாவருரு வுந்தோன் றிடா
  தண்டிநின் றேநல் வார்த்தைக ளுரைத்தாலு
    மவர்செவிக் கேறி டாது
மூற்பக்ஷ மானபேர் வருகினும் வாருமென
    மொழியவும் வாய் வராது
  மோதியே வாதப்பிடிப் புவந் ததுபோல
    முன்காலை யகல வைப்பார்
விற்பன மிகுத்தபெரி யோர்செய்தி சொன்னாலும்
    வெடுவெடுத் தேசி நிற்பார்
  விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
    விழும்போது தீரு மென்பார்
மற்புயந் தனினீப மாலையணி லோலனே!
    மார்பனே! வடிவேல வா!
  மயிலேறி வினையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே.

42. இத்தீங்குளோர் இன்ன கிரகம்போல்வ ரெனல்.

அன்னைதந் தையர்புத்தி கேளாத பிள்ளையோ
    வஷ்டமச் சனியாகு வா
  னஞ்சாம லெதிர்பேசி நிற்குமனை யாள்வாக்கி
    லங்கார கச்சன்ம மாம்
தன்னைமிஞ் சிச்சொன்ன வார்த்தைகே ளாவடிமை
    சந்திராஷ் டகமென்ன லாம்

தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ
சார்ந்தசன் மச்சூரி யன்
கன்னயமி லாதவஞ் சனைசெய்த தமையன்மூன்
றுமிடத் தில்வியா ழம்
நாடொறும் விரோதமிடு கொண்டோன் கொடுத்துளோன்
ராகுகே துக்க ளெனலாம்
மன்னயனை யன்றுசிறை தனிலிட்டு நம்பற்கு
மந்திர முரைத்த குருவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

43. நல்வினஞ் சேர்பயன்.

சந்தன விருக்ஷத்தை யண்டிநிற் கின்றபல
தருவுமவ் வாசனை தருந்
தங்கமக மேருவை யடுத்திடுங் காக்கையுஞ்
சாயல்பொன மயமே தரும்
பந்தமிகு பாலுடன் விளாவியதண் ணீரெலாம்
பால்போ னிறங் கொடுக்கும்
படிகமணி கட்குளே நிற்கின்ற வடமுமப்
படியே குணங்கொடுக் கும்
அந்தமிகு மாகதக் கல்லைத் தரித்திடி
லடுத்ததும் பசுமை யாகும்
ஆனபெரி யோர்களோடு சகவாச மதுசெய்யி
லவர்கள்குணம் வருமென்பர் காண்
மந்த்ர நெடுங்கிரியின் முன்கடல் கடைந்தவரி
மருகமெய்ஞ் ஞான முருகா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

44. வலியோரையும் ஊழ் வீடாமை.

அன்றுமுடி சூடுவ திருக்கரகு ராமன்மு
னருங்கா டுறைந்த தென்ன
அண்டரெல் லாமமிர்த முண்டிடப் பாமனுக்
காலம் லபித்த தென்ன

வென்றிவரு தேவர்சிறை மீட்டநீ களவில்வே
டிச்சியைச் சேர்ந்த தென்ன
மேதினி படைக்குமய னுக்கொரு சிரம்போகி
வெஞ்சிறையி லுற்ற தென்ன
ன்றுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோன
தென்ன காண் வல்லமையி னு
லெண்ணத்தி னுலொன்றும் வாராது பரமசிவ
னெத்தனப் படிமுடியு மாம்
ன்றுதனி னடனமிடு கங்கா தரன்பெற்ற
வரபுத்ர வடிவேல வா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

45. பெரியோர் வாக்கியபரிபாலனஞ் செய்தோர்.

ந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய்தோர்
தசரத குமார ராமன்
தமையனருள் வாக்கியபரி பாலனஞ் செய்தோர்கள்
தருமனுக் கிளைய நால்வர்
ந்தையி லுணர்ந்துகுரு வாக்கியபரி பாலனஞ்
செய்தவ னரிச்சந்திரன்
தேகியென் றோர்க்கிலையெ னுவாக்கிய பாலனஞ்
செய்தவன் றுன கன்னன்
க்கைதகவிர் வாக்யபரி பாலனஞ் செய்தவ
னீள்பெல மிகுந்த வநுமான்
றையுடன் பத்தாவின் வாக்யபரி பாலன
நிலத்தினு ளாகினி செய்தாள்
ர்க்கைவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர வுகந்த துணைவா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

46. முயற்சியின் மிக்கது ஊழெனல்.

ங்காள மேறுகினும் வாறுகோ லொருகாசு
மட்டன்றி யதிக மாமோ

வானேறி யுயரப் பறந்தாலு மூர்க்குருவி
வண்ணப் பருந்தாகு மோ
கங்கா சலந்தன்னின் மூழ்கினும் பேய்ச்சுரைக்
காய்நல்ல சுரையாகு மோ
கடலுக்கு ளுழியை யமுக்கியே மொண்டிடிற்
காணுமோ நாழி தான்
ஐங்காத மோடினுந் தன்வினைக டன்னொடே
யடையாம னீங்கி விடுமோ
யாரிடஞ் சென்றாலும் வெகுதொலைகள் சுற்றினு
மமைத்தபடி யன்றி வருமோ
மங்காத செந்தமிழ்க் கொண்டுநக் கீரர்க்கு
வந்ததுயர் தீர்த்த முருகா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

47. இடும்பாலழிவு.

சூரபத் மன்பெலமு மிராவணன் றீரமுந்
துடுக்கான கஞ்சன் வலியுந்
துடியான விரணியன் வரப்ரசா தங்களுந்
தொலையாத வாலி திடமும்
பாரமிகு துரியோத னதிநூற் றுவாது
பராக்கிரம மது கைடவர்
பாரிப்பு மாபெலித னண்மையுஞ் சோமுகன்
பாங்கிலுறு வல்லமை களும்
ஏரணவு கீசகன் கனமையுந் திரிபுர
ரெண்ணமுந் தக்க னெழிலு
மிவர்களது சம்பத்து நிறைவோ வவரவ
ரிடும்பா லழிந்த வன்றோ
மாரனைக் கண்ணு லெரித்தருள் சிவன்றந்த
வரபுத்ர வடிவேல வா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

48. நட்புநிலை.

மாமதியின் முயலான ததுதேய் வுழித்தேய்ந்து
வளருமப் போது வளரும்
வாவிதனி லாம்பல்கொட் டிகளதனி னீர்வற்றின்
வற்றிடும் பெருகி லுயரும்
பூமருவு புதல்பூடு கோடையிற் றீய்ந்திடும்
பொங்குகா லந் தழைக்கும்
புண்டரிக மிரவியோ மளவிற் குவிந்திடும்
போதுதய மாகின் மலரும்
தேமுட லிளைக்கிலுயிர் கூடவிளைக்குமது
தேறிலுயி ருஞ்சிறக் குஞ்
சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலு நல்லோர்
சிநேகமிப் படியாகுமே
வாமனசொ ரூபமதை யானைமுக னுக்கிளைய
வாலகுரு பரவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

49. கைப்பலனுமவை.

பருவத்தி லேபெற்ற சேயும் புரட்டாசி
பாதிசம் பாநடுகை யும்
பலமினிய வாடிதனி லானைவால் போலவே
பயிர்கொண்டு வரு கரும்பும்
கருணையொடு மிக்கநா [redacted] யமுளோர் கையினிற்
கடனிட்டு வைத்த முதலுங்
காலமது நேரிற் றனக்குறுதி யாகமுன்
கற்றுணர்ந் திடு கல்வியும்
விருதரச ரைக்கண்டு பழகிய சிநேகமும்
விவேகிகட் குபகார மும்
வீணல்ல விவையெல்லாம் கைப்பலன தாகவபி
விர்த்தியாய் வருமென்பர் காண்
மருவுலா வியநீப மாலையுந் தண்டரள
மாலையும் புனை மார்பனே

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

50. சமயத்துக்குதவாதவை.

கல்லாது புத்தகந் தனிலெழுதி வீட்டினிற்
கட்டிவைத் திடு வித்தையுங்
காலங்க ளுக்குதவ வேண்டுமென் றன்னியன்
கையிற் கொடுத்த பொருளும்
இல்லாளை நீங்கியே பிறர்பாரி சதமென்
றிருக்கின்ற குடிவாழ்க்கையும்
ஏறுமா றாகவே தேசாந் தரம்போ
யிருக்கின்ற பிள்ளை வாழ்வும்
சொல்லான தொன்றுமவர் மனமான தொன்றுமாச்
சொல்லுவஞ் சகர் நேசமுஞ்
சுகியமா யுண்டென் றிருப்பதெல் லாந்தருண
துரிதத்தி லுதவாது காண்
வல்லான் கொங்கைமட மாதுதெய் வானைகுற
வள்ளிபங் காள நேயா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

51. திரும்பமாட்டாதவை

ஆடரவின் வாயினி லகப்பட்ட தவளையு
மானைவா யிற் கரும்பு
மரிதான கப்பலிற் பாய்மாக் காற்றினி
லகப்பட்டு மெலி காக்கையும்
நாடறிய வேதாரை வார்த்துக் கொடுத்தது
நமன்கைக்கு ளான வுயிரும்
நலமாக வேயணை கடந்திட்ட வெள்ளமு
நாய்வேட்டை பட்ட முசலும்
தேடியுண் பார்கைக்கு ளானபல வுடமையுந்
தீவாதை யரன மனையுந்
திரள்கொடுங் கோலாசர் கைக்கேறு பொருளுந்
திரும்பிவா ராவென்பர் காண்

மாடமிசை யன்னக்கொ டித்திரள்கொள் சோணாடு
வாழவந் திடுமுதல் வனே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

52. இதினுமிது நன்றென்பவை

கடுகடுத் தாயிரஞ் செய்குவதி லின்சொலாற்
கனிகொண் டழைத்த னன்று
கனவேள்வி யாயிரஞ் செய்வதிற் பொய்யுரை
கருத்தொடு சொலாமை நன்று
வெடுவெடுக் கின்றதோ ரவிவேகி யுறவினில்
விவேகியொடு பகைமை நன்று
வெகுமதிக ளாயிரஞ் செய்வதி னரைக்காசு
வேளைகண் டுதவ னன்று
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்கு
சற்றுமிலை யென்ன னன்று
சம்பத் துடன்பிணியின் மெலிகுவதி னோயற்ற
தாரித்தி ரியநன்று காண்
மடுவினிற் கரியோல மென்னவந் தருள்செய்த
மான்மருக ஞான முதல்வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

53. பலகூடினு மொன்றற் கீடாகாதவை.

தாரகைக ளொருகோடி வானத் திருக்கினுஞ்
சந்திரற் கீடாகு மோ
தாருவிற் கொடியதொனிகள் பலகூடி னுமொரு
தம்பட்ட வோசை யாமோ
கோரமிகு பன்றியின் குட்டிபல கூடினுமொரு
குஞ்சரக் கன்றாகு மோ
கொட்டிமலர் வாவியிற் பலகூடி னுமொரு
கோகனக மலராகு மோ
பாரமிகு மாமலைகள் பலகூடி னுமொரு
பைம்பொன்மக மேரு வாமோ

பலனிலாப் பிள்ளைக ளனேகம் பிறந்தும்விற்
பனனொருவ னுக்கு நிகரோ
வாரணக் கொடியொரு காத்தில் பிடித்தோன்றில்
வடிவே லணிந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே

54. அருமை யறிதல்.

மணமாலை யருமையைப் பிணைபவர்க ளேயறிவர்
மட்டிக்கு ரங்கறியு மோ
மக்களுடை யருமையைப் பெற்றவர்க ளேயறிவர்
மலடிதா னறிவ துண்டோ
கணவருடை யருமைக் கற்பான மாதறிவள்
கணிகையா னவ ளறிவாளோ
கருதுமொரு சந்தியின் பாண்டமென் பதைவருங்
களவான நாயறியு மோ
குணமான கிளியருமை தனைவளர்த் தவரறிவர்
கொடியபூ னையு மறியுமோ
குலவுபெரி யோரருமை நல்லோர்க ளேயறிவர்
கொடியமூடர் தாமறிவ ரோ
மணவாள நீயென்று குறவள்ளி பின்றொடர
வனமூடு தழுவு மழகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

55. தீச்சார்பாற் பயன்படாதவை.

மடுவினிற் கஞ்சமல ருண்டொருவ ரணுகாமல்
வன்முதலை யங்கிருக்கும்
மலையினிற் றேனுண்டு சென்றொருவர் கிட்டாமல்
மருவியதில் வண்டிருக் கும்
நெடுமைதிகழ் தாழைமல ருண்டொருவ ரணுகாம
னீங்காத முள்ளிருக் கும்
நீடுபல சந்தனவி ருக்ஷமுண் டணுகாது
நீளரவு சூழ்ந்திருக் கும்

குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்க ளங்கிருக் குங்
கொடுக்குந்தி யாகியுண் டிடையூறு பேசுங்
கொடும்பாவி யுண்டு கண்டாய்

வடுவையுங் கடுவையும் பொருவுமிரு கண்ணிகுற
வள்ளிக் குகந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

56. வேசைய ரிழிவு.

பூவில்வே சிகள்வீடு சந்தைப் பெரும்பேட்டை
பூனைமலர் படுக்கை வீடு
பொன்வாசல் கட்டில்பொது வம்பல மூடுத்ததுகில்
பொருவில்சூ தாடு சாலை

மேவலா கியகொங்கை கையாடு திரள்பந்து
விழிமனங் கவர்தூண்டி லாம்
மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோகமொரு
மின்னலிரு தொடைசர்ப்ப மாம்

பூவலா கியவல்கு கோதண்டம் வாங்குமிட
மதிகபட மாமனது கல்
லமிர்தவா யிதழ்சித்ர சாலையெச் சிற்குழி
யவர்க்காசை வைக்க லாமோ

ாவடிவு கொண்டே யொளித்தவொரு சூரனை
வதைத்தவடி வேலாயுதா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

57. கலிகாலக் கொடுமை

ாய்புத்தி சொன்னால் மறுத்திடுங் காலமுயர்
தந்தையைச் சீறுகாலஞ்
சற்குருவை நிந்தைசெய் காலமெய்க் கடவுளைச்
சற்றுமெண் ணாத காலம்

பேய்தெய்வ மென்றுபசரித்திடுங் கால
புரட்டருக் கேற்ற காலம்
பெண்டாட்டி வையினுங் கேட்கின்ற காலநற்
பெரியர்சொற் கேளாத காலம்
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலமிகு
சிறியவன் பெருகு காலஞ்
செருவில்விட் டோடினோர் வரிசைபெறு காலம்வசை
செப்புவோர்க் குதவு காலம்
வாய்மதம் பேசிவிடு மணியாய காரர்க்கு
வாய்த்தகலி கால மையா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

58. அவரவர்க் குரியவை.

கல்வியொடு கனமுறச் சபையின்மேல் வட்டமாக்
காணவைப போன் பிதாவாங்
கற்றுணர்ந் தேதனது புகழாற் பிதாவைப்ர
காசஞ்செய் வோன் புத்திரன்
செல்வமிகு கணவனே தெய்வமென் றனுதினஞ்
சிந்தைசெய் பவள்மனைவி யாஞ்
சினேகிதன் போலவே யன்புவைத் துண்மைமொழி
செப்புமவ னேசோத ரன்
தொல்வள மிகுந்தநூற் கரைதெரிந் துறுதிமொழி
சொல்லுமவ னேகுரவ னுஞ்
சொன்னநெறி தவறாமல் வழிபாடு செய்துவரு
துய்யனே யினிய சீஷன்
வல்விரக மிஞ்சுசுர குஞ்சரியு டன்குறவர்
வஞ்சியை மணந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

59. சிறுமையிற் பெருமை.

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக் குந்

திகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத் தாசாது
தேகத்தின் மேலிருக்கும்
போற்றியிடு பூச்சியின் வாயினால் பட்டென்று
பூசைக்கு நேச மாகும்
புகலரிய வண்டெச்சி லானதேன் றேவர்கொள்
புனிதவபி டேக மாகும்
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபழு கனைவர்க்கு மாஞ்
சாதியீ னத்திற் பிறக்கினுங் கற்றோர்கள்
சபையின்மேல் வட்ட மன்றோ
மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞான முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

60. செய்யத் தகாதவை

தானு சரித்துவரு தெய்வமிது வென்றுபொய்ச்
சத்தியஞ் செயல்வி டாது
தனவீட்டி லேற்றிய விளக்கென்று முத்தந்
தனைக்கொடுத் தாலது சுடும்
ஆனாலு மேலவர்கண் மெத்தவுந் தனதென்
றடாதது செயிற் கெடுதியா
மானைதான் மெத்தப் பழக்கமா னாலுஞ்செ
யாதுசெய் தாற்கொன்றிடும்
தீனான தினிதென்று மீதூண் விரும்பினாற்
றேகபீ டைகளே தருஞ்
செகராசர் சனுவென்ன வேலாத காரியஞ்
செய்தான் மனம்பொறார் காண்
வானாடு புகழுமொரு சோணாடு தழையவிவண்
வந்தவ தரித்த முதலே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

61. நடுவு நிலைமை

வந்தவிவ காரத்தி லினியபரி தானங்கள்
வருமென்று நேச ரென்றும்
வன்பகைஞ ரென்றுமய லோரென்றுமிக்கதனை
வானென்று மேழை யென்றும்
இந்தவகை யைக்குறித் தொருபக்ஷ பாதமோ
ரெள்ளள வுரைத்தி டாம
லெண்ணமுட னேவிகித புத்தியொடு சாக்ஷிக்கு
மேற்கச்ச பாச மதமாம்
முந்தவிரு தலையுஞ் சமஞ்செய்த கோல்போன்
மொழிந்திடிற் றர்மமது காண்
மூனவீம னுடல்பாதி மிருகந் தனக்கென்று
மூன்றருமர் சொன்ன தலைவோ
மைந்தனென வன்றுமை முலைப்பால் கொடுத்திட
வளர்ந்தருள் குழந்தை வடிவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

62. பக்ஷபாதம்

ஓரவிவ காரமா வந்தவர் முகம்பார்த்
துரைப்போர் மலைக்குரங் கா
முயர்வெள் ளெருக்குடன் முளைத்துவிடு மவரில்ல
முறையுமூர் பாழ்நத்த மாம்
தாரணியி லிவர்கள்கிளை நெல்லியிலை போலுகுஞ்
சமானமா வெழுபிறப் புஞ்
சந்ததியி லாதுழல்வ ரவர்முகத் தினின்மூத்த
தையலே குடியிருப் பாள்
பாரமிவ ரென்றுபுவி மங்கையு நடுங்குவாள்
பழித்ததுர் மரண மாவார்
பகர்முடிவி லேரவுர வாதிநர கத்தனு
பவிப்பரெப் போது மென்பார்
வாரமுட னருணகிரி நாதருக் கனுபூதி
வைத்தெழுதி யருள் குருபரா

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

63. ஒன்றில்லாமையாற் சிறவாதவை

கொங்கையில் லாதவட் கெத்தனைப் பணியுடைமை
கூடினும் பெண்மை யில்லை
கூறுநிறை கல்வியில் லாமலெத் தனைகவிதை
கூறினும் புலமை யில்லை
சங்கையில் லாதவர்க் கெத்தனை விவேகந்
தரிக்கினுங் கனதை யில்லை
சட்சுவை பதார்த்தவகை யுற்றாலு நெய்யிலாச்
சாதமுந் திர்த்தி யில்லை
பங்கய மிலாமலெத் தனைமலர்கள் வாவியிற்
பாரித்து மேன்மை யில்லை
பத்தியில் லாமல்வெகு நியமமா யர்ச்சனைகள்
பண்ணினும் பூசை யில்லை
மங்கைய ரிலாமனைக் கெத்தனை யருஞ்செல்வம்
வரினுமில் வாழ்க்கை யில்லை
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

64. அளவுபடாதவை

வாரியா ழத்தையும் புனலெறிய மலைகளையு
மானிடர்கள் சனனத்தை யும்
மன்னவர்க ணினைவையும் புருஷர்போ கங்களையும்
வானினுயர் நீளத்தை யும்
பாரிலெழு மணலையும் பலபிரா ணிகளையும்
படியாண்ட மன்னவரை யும்
பருப்பதத் தின்னிறைய மீசுரச் செயலையும்
பனிமாரி பொழிதுளியை யும்
சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழு கவியையுஞ்
சித்தர்தம துள்ளத்தை யுந்
தெரிவையர்கள் சிந்தையையு மிவ்வள வெனும்படி
தெரிந்தள விடக்கூடு மோ

வாரிச மடந்தைகுடி கொண்டநெடு மாலுக்கு
மருகனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

65. பிறர்மனை நயத்தல்

தந்தார மன்றியே பரதார மேனினைவு
தனைவைத்த காமுகர்க் குத்
தயையில்லை நிசமில்லை வெட்கமிலை சமரினிற்
றைரியஞ் சற்று மில்லை
அந்தார மில்லைதொடர் முறையில்லை நிலையில்லை
யறிவில்லை மரபு மில்லை
யறமில்லை நிதியில்லை யிரவினிற் றனிவழிக்
கச்சமோ மனதி லில்லை
சுந்தாத சனமில்லை யினமில்லை யெவருக்கு
நட்பில்லை கனதை யில்லை
நயமில்லை யிளமைதனில் வலிமையிலை முத்திபெறு
ஞானமிலை யென்பர் கண்டாய்
மந்தார பரிமள சுகந்தாதி புனையுமணி
மார்பனே யருளாளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

66. மானம் விடாமை

கனபார மேறிற் பிளந்திடுவ தன்றியே
கற்றூண் வளைந் திடாது
கருதலர்க ளாலுடைந் தாலுமுயி ரளவிலே
சனசூர னமரின் முறியான்
தினமோ ரிடுக்கண்வந் துற்றாலும் வேங்கைதோல்
சீவனள விற்கொ டாது
திறமான பெரியோர் சரீரங்கள் போகினுஞ்
செப்புமுறை தவறிடார்கள்
வனமேறு கவரிமா வுயிர்போகு மளவுந்தன்
மயிரிலொன் றுங்கொடாது

வாராத வாபத்து வருகினுங் கற்புடைய
மாதுநிறை தவறி நடவாள்
னதார வுனதடைக் கலமென்ற கீரற்கு
வன்சிறை தவிர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

67. திருவருட் சிறப்பு

திருமகள் கடாக்ஷமுண் டானு லெவர்க்குஞ்
சிறப்புண்டு கனதை யுண்டு
சென்றவழி யெல்லாம் பெரும்பாதை யாய்விடுஞ்
செல்லாத வார்த்தை செல்லும்
பாருமொரு துரும்புமரி யாதையாஞ் செல்வமோ
புகல்பெருக் காறு போலாம்
புலியின்முன் கண்டுமதி யாதபேர் பழகினவர்
போலவே நேசமா வார்
பருமையொடு சாதியி லுயர்ச்சிதரு மனுதினம்
பேரும்ப்ர திஷ்டை யுண்டாம்
பிரியமொடு பகையாளி கூடவுற வாகுவான்
பேச்சினிற் பிழைவாரா து
ருமென நினைத்தபொருள் கைகூடி வருமதிக
வல்லமைகண் மிகவு முண்டாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

68. நட்பு நிலை

ரவ னுதிப்பதெங் கேநளின மெங்கே
களித்துள மலர்ந்த தென்ன
கார்மேக மெங்கே பசுந்தோகை யெங்கே
கருத்தினட் பான தென்ன
யமெங் கேபெருங் குமுதமெங் கேமுக
மலர்ந்துமகிழ் கொண்ட தென்ன
வல்விரவி விடிவதெங் கேகோழி யெங்கே
மகிழ்ந்துகூ விடுத லென்ன

நீதியரச ரெங்கே யிருந்தாலு மவர்களொடு
நேசமொன் றுயிருக் கு
நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந்தாலு மவர்
நிறைபக்ஷ மறவார்கள் காண்
மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணட்டதிப னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

69. காலமறிதல்

காகம் பகற்காலம் வென்றிடுங் கூகையைக்
கனகமுடி யரசர் தாமுங்
கருதுசய காலமது கண்டந்த வேளையிற்
காரிய முடித்து விடுவார்
மேகமுங் கார்கால மதுகண்டு பயிர்விளைய
மேன்மேலு மாரி பொழியும்
மிக்கான வறிவுளோர் வருதருண காலத்தின்
மிடியாள ருக்குதவு வார்
நாகரிக முறுகுயில் வசந்தகா லத்திலே
நலமென்று கந்து கூவு
நல்லோர் குறித்ததைப் பதறுமலந்தந்த
நாளையின் முடிப்பர் கண்டாய்
வாகனைய காலனை மாலைபுல் லெனுமுலக
வாடிக்கை நிசமல்ல வோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

70. இடனறிதல்

தரையதனி லோடுதேர் நீள்கடலி லோடுமோ
சலதிமிசை யோடு கப்பல்
தரைமீதி லோடுமோ தண்ணீரி லுறுமுதலை
தன்முன்னே கரிநிற்கு மோ
விரைமலர் முடிப்பரமர் வேணியா விளைவெல்ல
மிருகருட னுலாகு மோ

வேங்கைக ளிருக்கின்ற காடுதனி லஞ்சாமல்
வேறொருவர் செல்ல வசமோ
துரைகளைப் பெரியோரை யாண்டிவாழ் வோர்தமைத்
துஷ்டர்பகை யென்ன செய்யுந்
துணைகண்டு சேரிட மறிந்துசே ரென்றௌவை
சொன்னகதை பொய்யல்ல வே
வரையூது மாயனை யடுத்தலாற் பஞ்சவர்கள்
வன்போர் செயித்த தன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

71. யாக்கை நிலையாமை

மனுநன்மாந் தாதாமு னனவர்க ளெல்லாரு
மண்மே லிருந்து வாழ்ந்து
மடியா திருந்தபே ரில்லையவர் தேடியதை
வாரிவைத் தவரு மில்லை
பனியதனை நம்பியே யேர்பூட்டு கதையெனப்
பாழான வுடலை நம்பிப்
பார்மீதி லின்னம்வெகு நாளிருப் போமென்று
பலகோடி நினைவை யெண்ணி
அனிதமாய் விருதாவின் மாய்வதே யல்லாம
லன்பாக நின் பதத்தை
யர்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென் றெண்ணார்க
ளாசைவலை யிற்சுழலு வார்
வனிதையர்கள் காமவி காரமே பகையாகு
மற்றுமொரு பகைமை யுண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

72. வேட்டகத் திகழ்ச்சி

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடுமளவின்
மேன்மேலு முபசரித்து
விருந்துகள் சமைத்துநெய் பாறயிர் பதார்த்தவகை
வேண்டுவ வெலாமமைப் பார்

ஊட்டமிகு வர்க்கவகை செய்திடுவர் தைலமிட்
டுறுதியாய் முழுகுவிப் பா
ரோயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவ
ருற்றநா ளுலாகி லோ
நாட்டமொரு படியிறங் குவதுபோன் மரியாதை
நாளுக்குநாள் குறைவு றும்
நகைசெய்வர் மைத்துனர்க ளலுவல்பார்போவென்
றாணுமன் மாமி சொல்வாள்
வாட்டமனை யாளொரு துரும்பாய் மதிப்பளவன்
மட்டியினு மட்டி யன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

73. செல்வ நிலையாமை

ஓடமிடு மிடமது மணற்சுடுஞ் சுடுமிடமு
மோடமிக வேநடக்கு
முற்றதோ ராற்றின்மடு மேடாகு மேடெலா
முறுபுனல்மொண் மடுவாயி டும்
நாடுகா டாகுமுயர் காடுநா டாகிவிடு
நவில்சகடு மேல்கீழ தாய்
நடையூறு சந்தைபல கூடுமுட னேகலையு
நன்னிலவு மிருளாய் விடும்
நீடுபகல் போயபின் பிரவாகு மிரவுபோய்
நிறைபகற் போதாய் விடும்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
நிசமல்ல வாழ்வுகண்டாய்
மாடுமனை பாரிசன மக்கணிதி பூஷணமு
மருவுகண வாகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

74. பிறந்தார் பெறுபேறு

சடமொன் றெடுத்தாற் புவிக்குநல் லவனென்று
தன்பேர் விளங்க வேண்டுஞ்

சதிருடனி தல்லாது மெஞ்ஞானி யென்றவ
தரிக்கவே வேண்டு மல்லால்
திடமினிய ரணசூர வீரனிவ னென்னவே
திசைமெச்ச வேண்டு மல்லால்
தேகியென வருபவர்க் கில்லையென் றுமலே
செய்யவே வேண்டு மல்லால்
அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவா
னுகவே வேண்டு மல்லா
லறிவான துரைமக்க ளாகவா வேண்டுமிவ
ரதிகபூ பால ரையா
வடகுவடு கிடுகிடென வெழுகடலு மலையெறிய
மணியுரகன் முடிக ணெரிய
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

75. வேசை நிந்தை

தேடித்தம் வீட்டிற் பணக்காரர் வந்திடிற்
றேகசீ வன்போல வே
சிநேகித்த வும்மையொரு பொழுதுகா ணவிடிற்
செல்லுறு தன்ன மென்றே
கூடிச் சுகிப்பரென் றுசையுண் மேலென்று
கூசாம லாணை யிடுவார்
கொங்கையை வெடிக்கப் பிடிக்கக் கொடுத்திதழ்
கொடுப்பர்சும் பன முகப்பர்
வேடிக்கை பேசியே கைமுதல் பறித்தபின்
வேறுபட நிந்தை செய்து
விடவிடப் பேசுவார் தாய்கலக மூட்டியே
விட்டுத் துரத்தி விடுவார்
வாடிக்கை யாயிந்த வண்டப் பரத்தையர்
மயக்கத்தை நம்ப லாமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

76. இதற்கிது உறுதியெனல்

கைக்குறுதி வேல்வின் மனைக்குறுதி மனையாள்
கவிக்குறுதி பொருளடக் கம்
கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சொற்குறுதி
கண்டிடிற் சத்ய வசனங்
மெய்க்குறுதி முன்பின் சபைக்குறுதி வித்வசனம்
வேசையர்க் குறுதி தேடல்
விரகருக் குறுதிபெண் மூப்பினுக் குறுதியூண்
வீரருக் குறுதி தீரம்
செய்க்குறுதி நீரரும் பார்க்குறுதி செங்கோல்
செழும்படைக் குறுதி வேழஞ்
செல்வந் தனக்குறுதி பிள்ளைக ளர்க்குறுதி
சேர்ந்திடுஞ் சர்ச்சனர்க ளாம்
மைக்குறுதி யாகிய விழிக்குற மடந்தைசா
மங்கைமரு வுந்தலைவ னே
மயிலேறி விளையாடு குகனைபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

77. வறுமையிற் சிறுமை

வறுமைதான் வந்திடிற் றாய்ப்பழுது சொல்லுவாள்
மனையாட்டி சற்று மெண்ணாள்
வாக்கிற் பிறக்கின்ற சொல்லெலாம் பொல்லாத
வசனமாய் வந்து விளையும்
சிறுமையொடு தொலையா விசாரமே யல்லாது
சிந்தையிற் றைரிய மில்லை
செய்யசபை தன்னிலே சென்றுவர வெட்கமாஞ்
செல்வரைக் காணி னுணும்
உறுதிபெறு வீரமுங் குன்றிடும் விருந்துவரி
லுயிருடன் செத்த பிணமா
முலகம் பழித்திடும் பெருமையோர் முன்புசென்
றொருவரொடு செய்தி சொன்னல்
மறுவசன முஞ்சொலார் துன்பிணிற் றுன்பமிது
வந்தணுகி டாதருளு வாய்

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

78. தீச்சார்பா னன்மை யிழப்பு

ஆனைதண் ணீரினிழல் பார்த்திடத் தவளைசென்
றங்கே கலக்கி யுலவு
மாயிரம் பேர்கூடி வீடுகட் டிடிலேத
மறைகுறளு முடனே வரும்
ஏனைநற் பெரியோர்கள் போசனஞ் செயுமளவி
லீக்கிடந் திசைகேட தா
மின்பமிகு பசுவிலே கன்றுசென் றூட்டுதற்
கினியகோ னதுதடுக் கும்
சேனைமன் னவனென்ன கருமகிய மிக்கினுஞ்
சிறியோர்க ளாற்குறை படுஞ்
சிங்கத்தை யும்பெரிய ரிஷபத்தை யும்பகைமை
செய்ததொரு நரியல்ல வோ
மானையுந் திகழ்தெய்வ யானையுந் தழுவுமணி
மார்பனே யருளாள னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

79. இடையூறுற்றும் பயன் படுபவை

ஆறுதண் ணீர்வற்றி முட்டாலு மூற்றுநீ
ரமுதபா னங்கொடுக் கு
மாதவனை யொருபாதி கட்செவி மறைத்தாலு
மப்போது முதவிசெய் வன்
கூறுமதி தேய்பிறைய தாகவே கூறையினுங்
குவலவத் திருள்சிதைக் கும்
கொல்லைதான் சாவிபோய் விட்டாலு மங்குவரு
குருவிக்கு மேய்ச்ச லுண்டு
வீறுடை னுதாரிதான் மிடியான போதினிலு
மிகநாடி வருப வர்க்கு
வேறுவகை யில்லையென் றுரையாது யன்றன
வியந்துள மகிழ்ந்து தவுவான்

மாறுபடு சூரசங் காரகம் பீரனே
வடிவே லணிந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

80. இன்னவர்க்கிது வில்லையெனல்

சார்பிலா தவருக்கு நிலையேது முதலிலா
தவருக் கிலாப மேது
தயையிலா தவர்தமக் குறவேது பணமிலா
தார்க்கேது வேசை யுறவு
ஊரிலா தவர் தமக் காசேது பசிவேளை
யுண்டிடார்க் குறுதி நிலையே
துண்மையில் லாதவர்க் கறமேது முயல்விலார்க்
குறுவதொரு செல்வ மேது
சோர்விலா தவருக்கு மற்றுமொரு பயமேது
சுகமிலார்க் காசை யேது
துர்க்குண மிலாதவர்க் கெதிராளி யேதிடர்செய்
துஷ்டர்க் கிரக்க மேது
மார்புருவ வாலிமே லஸ்திரம் விடுத்தநெடு
மால்மருக னான முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

81. இதினுமிது நன்றெனல்

பஞ்சரித் தருமையறி யார்பொருளை யெய்தலிற்
பலர்மனைப் பிச்சை நன்று
பரிவாக வுபசார மில்லா விருந்தினிற்
பட்டினி யிருக்கை நன்று
தஞ்சமொரு முயலையடு வென்றிதனில் யானையொடு
சமர்செய்து தோற்ற னன்று
சரசகுண மில்லாத பெண்களைச் சேர்தலிற்
சன்னியாசி சித்த னன்று
அஞ்சலார் தங்களொடு நட்பா யிருப்பதனி
லரவினொடு பழகுவது நன்
றந்தணர்க் காபத்தி லுதவா திருப்பதனி
லாருயிர் விடுத்த னன்று

வஞ்சக ருடன்கூடி வாழ்தலிற் றனியே
வருந்திடுஞ் சிறுமை நன்று
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே,

82. நிலையாதவை

கொற்றவர்கள் ராணுவமு மாறுசே ராகிய
குளங்களும் வேசை யுறவுங்
குணமிலார் நேசமும் பாம்பொடு பழக்கமுங்
குலவுநீர் விளையாட லும்
பற்றலார் தமதிடை வருந்துவிசு வாசமும்
பழையதா யாதி னுறும்
பரதார மாதரது போகமும் பெருகிவரு
பாங்கான வாற்று வரவும்
நற்றுமொரு துர்ப்புத்தி கேட்கின்ற பேருறவு
நல்லமத யானை நட்பும்
நாவினல் லுறவுமொரு நாள்போ லிராதிவைக
ணம்பப் படாது கண்டாய்
மற்றுமொரு துணையில்லை நீதுணையெ னப்பரவும்
வானவர்கள் சிறைமீட்ட வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே,

83. நற்புலவர் தீப்புலவர் செயல்

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி
விருப்பமொடு தேடி நாடும்
மிடைகருங் காகங்க ளெக்கனி யிருந்தாலும்
வேப்பங் கனிக்கு நாடும்
எக்காலும் வரிவண்டு பங்கேரு கத்தினி
லிருக்கின்ற தேனை நாடு
மெத்தனை சுகந்தவகை யுற்றாலு முருள்வண்
டினந்துர் மலத்தை நாடும்
தக்கோர் பொருட்சுவை நயங்களெங் கேயென்று
தாம்பார்த் துகந்து கொள்வார்

தாழ்வான வன்கண்ணர் குற்றமெங் கேயென்று
தமிழிலா ராய்வர் கண்டாய்
மைக்காவி விழிமாது தெய்வானை யுங்குறவர்
வள்ளியுந் தழுவுந் தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

84. தாழ்தற் பெருமை

வேங்கைகள் பதுங்குதலு மாமுகி லொதுங்குதலும்
விரிசிலை குனிந் திடுதலும்
மேடம தகன்றிடலும் யானைக லொதுங்குதலும்
வெள்விடைக டுள்ளி விழலும்
மூங்கில்கள் வணங்குதலு மேலவ ரிணங்குதலு
முனிவர்க ளயர்ந்து கொளலும்
முதிர்படை யொதுங்குதலும் வினைஞர்க ளடங்குதலு
முதலினர் பயந் திடுதலும்
ஆங்கரவு சாய்குதலு மகிழ்மல ருலர்ந்திடலு
மாயர்குழல் சூடு படலு
மம்புவியி லிவைகாரி யங்களுக் கல்லாம
லதனு விளைப்பு வருமோ
மாங்கனிக் காவரனை வலமது புரிந்துவளர்
மதகரிக் கிளைய முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

85. தெய்வச் செயல்

சோடாய் மரத்திற் புறுரெண் டிருந்திடத்
தருவுகண் டே வேடுவன்
றோலமா லவையெய்ய வேண்டுமென் றெருகணை
தொடுத்துவில் வாங்கி நிற்க
ஊடாடி மேலே யெழும்பிடி லடிப்பதற்
குலவுரா சாளி கூட
வுயரப் பறந்துகொண் டேதிரிய வப்போ
துதைத்தசிலை வேட னடியில்

சேடாக வல்விடந் தீண்டவே யவன்விழச்
சிலையிற் றொடுத்த வாளி
சென்றிரா சாளிமெய் தைத்துவிழ வவ்விரு
சிறைப்புறா வாழ்ந்த வன்றோ
வாடாம லிவையெலாஞ் சிவன்செயல்க ளல்லாதுன்
மனச்செயலி னாலும் வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

86. பாட லியல்பு

எழுத்தசைகள் சீர்தளைக ளடிதொடைகள் சிதையா
திருக்கவே வேண்டு மப்பா
லீரைம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்
பினியசொற் கமைய வேண்டும்
அழுத்தமிகு குறளினுக் கொப்பாக வேபொரு
ளடக்கமு மிருக்க வேண்டு
மன்பான பாவின மிசைந்துவரல் வேண்டுமு
னலங்கார முற்ற துறையில்
பழுத்துள முவந்தோசை யுற்றுவரல் வேண்டும்
படிக்குமிசை கூடல் வேண்டும்
பாங்காக வின்னவை பொருந்திடச் சொற்கவிதை
பாடிச் சிறப்பென்பர் காண்
மழுத்தினஞ் செங்கைதனில் வைத்தங் காளனருண்
மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

87. விபூதி தரிக்கு முறைமை

பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெடுத் துப்
பாரினில் விழாதபடி யண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதிலொழுக
சித்தமு விரல்களா னெற்றியி னழுந்தலற
நினைவாய்த் தரிப்ப வர்க்கு

நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமா
நீங்காம னிமல னங்கே
சத்தியொடு சித்தம்விளை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யுந் திரு
சஞ்சலம் வாராதுபர கதியுதவு மிவ்வாறயே
சத்தியுஞ் சிவனென்ன லாம்
மத்தினிய மேருவென வைத்தமு தினைக்கடையு
மான்மருக னை முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

88. விபூதி வாங்கு முறைமை

பரிதனி லிருந்துமியல் சிவிகையி லிருந்துமுயர்
பலகையி லிருந்து மிகவே
பாங்கான வம்பலந் தனிலே யிருந்தும்
பருத்ததிண் ணையிலிருந் தும்
தெரிவொடுகொடுப்பவர்கள் கீழ்நிற்க மேனின்று
திருநீறு வாங்கி யிடினுஞ்
செங்கையொன் றாலும்விரன் மூன்றாலும் வாங்கி
திகழ்தம் பலத்தி னேடும் [னும்
அரியதொரு பாதையி னடக்கின்ற போதிலு
மசுத்தநில மான வதிலு
மங்கே தரிக்கிலுந் தந்திடிற் றள்ளினு
மவர்க்குநர கென்பர் கண்டாய்
வரிவிழி மடத்தைகுற வள்ளிநா யகிதனை
மணந்துமகிழ் சக நாதனே
மயிலேறி விளையாடு குகனேபுல்வயனீடு
மலைமேவு குமரேச னே.

89. இவ்வுறுப்பாற் பயனில்லையெனல்.

தேவால யஞ்சுற்றி டாதகா லென்னகா
றெரிசியாக் கண்ணென்ன கண்
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
சிந்தைதா னென்ன சிந்தை

மேலாக மஞ்சிவ புராணமவை கேளாமல்
விட்டசெவி யென்ன செவிகள்
விமலனை வணங்காத சென்னியென் சென்னிபணி
விடைசெயாக் கையென்ன கை

நாவார நினையேத் திடாதவா யென்னவாய்
நற்றீர்த்த மூழ்கா வுட
லுனிலத் தென்னவுடல பாவியா கியசவன
நண்ணினற் பலனேது காண்

மாவாகி வேலைதனில் வருசூரன் மார்புருவ
வடிவேலை விட்ட முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

90. நற்பொருளோடு தீப்பொருள் பிறத்தல்

கோகனக மங்கையுடன் மூத்தவள் பிறந்தென்ன
குலவுமாட்டின்க ணதர்தான்
கூடப் பிறந்தென்ன தண்ணீரி னுடனே
கொடும்பாசி யுற்று மென்ன

மாகருணை யமுதினொடு நஞ்சும் பிறந்தென்ன
வல்லிரும் பிற்றுருத் தான்
வந்தே பிறந்தென்ன நெடுமரந் தனின்மொச்குள்
வளமொடு பிறந்தென்ன வுண்

பாகமிகு செந்நெலொடு பதர்தான் பிறந்தென்ன
பண்ணுமொரு தாய்வயிற் றிற்
பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன
பலனேது மில்லை யன்றோ

மாகனக மேருவைச் சிலையென வளைத்தசிவன்
மைந்தனென வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

91. தன்னினத்தா லழிவு

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க்
  கூறிரும் புகளை வெல்லுங்
கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன்
  கோத்திர மெலா மழிக்கும்

கலமான பார்வைசேர் குருவியா னதுவந்து
  நண்ணுபற வைகளை யார்க்கு
நட்புடன் வளர்ந்தகலை மானென்று சென்றுதன்
  னவில்சாதி தனை யிழுக்கும

உலவுநற் குடிதனிற் கோளர்க ளிருந்துகொண்
  டுற்றுரை யீட ழிப்ப
குளவணில் லாமலூ ரழியா தெனச்சொல்லு
  முலகமொழி நிசமல்ல வோ

வலமாக வந்தா ணிடத்தினிற் கனிகொண்ட
  மதயானை தன்சோ தரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேச னே.

92. வீணுக் குழைத்தல்

குயின்முட்டை தனதென்று காக்கையடை காக்குங்
  குணம்போலு மீக்களெல் லாங்
கூடியே தாமுண்ண வேண்டுமென் றேதினங்
  கூடுய்த்த நறவு போலும்

பயில்சோர ருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற
  பாலனென் றுட்கருதி யே
பாராட்டி மூத்தமிட் டன்பாய் வளர்த்திடும்
  பண்பிலாப் புருடர் போலும்

துயிலின்றி நிதிகளைத் தேடியே யொருவர்பாற்
  றெரட்டுத் தெரித்திடாம
றுகைபண்ணி வைத்திடுவர் கைக்கொண்டு போக வ
  சொந்தமா னவர்வேறு காண்

வயிரமொடு சூரனைச் சங்கார மேசெய்து
வானவர்க் குதவு தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

93. இதுசேரி னிது பயன்படாதெனல்

அழலுக்கு ளேவிட்ட நெய்யும் பெருக்கான
வாற்றிற் கரைத்த புளியு
மரிதான கமரிற் கவிழ்த்திட்ட பாலும்வரு
மலகைகட் கிடுபூசை யும்
சுழல்பெருங் காற்றினில் வெடித்தபஞ் சும்மணற்
சொரிநறும் பனிநீரு நீள்
சொல்லரிய காட்டுக் கெரித்தநில வுங்கடல்
சுழிக்குளே விடுகப்ப லும்.
விழலுக் கிறைத்திட்ட தண்ணீரு முகமாய
வேசைக் களித்த பொருளும்
வீணருக் கேசெய்த நன்றியும பலனில்லை
விருதாவி தென்பர் கண்டாய்
மழலைப் பசுங்கிள்ளை முன்கைமலை மங்கைதரு
வண்ணக் குழந்தை முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

94. கைவிடத் தகாதவர்

அன்னைசுற் றங்களையு மற்றைநாண் முதலா
வடுத்துவரு பழையோரையு
மடுபகைவ ரிற்றப்பி வந்தவொரு வேந்தனையு
மன்பான பெரியோரையும்
தன்னைநம் பினவரையு மேழையா னவரையுஞ்
சார்ந்தமறை யோர்தம்மை யுந்
தருணமிது வென்றுநல் லாபத்து வேளையிற்
சரணம் புகுந்தோரை யும்
ன்னயம தாகமுன் னுதவிசெய் தோரையு
நாளுந் தனக்குறுதி யாய்

நத்துசேவகனையுங் காப்பதல் லாதுகை
நழுவவிட லாகாது காண்
மன்னயிலு மினியசெஞ் சேவலுஞ் செங்கைமலர்
வைத்தசர வணபூ பனே
மாயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

95. தகாத செயல்

அண்டிவரு முற்றூர் பசித்தங் கிருக்கவே
யன்னியர்க் குதவு வோரு
மாசுதபு பெரியோர்செய் நேசத்தை விட்டுப்பி
னற்பரை யடுத்த பேருங்
கொண்டவொரு மனையா ளிருக்கப் பரத்தையைக்
கொண்டாடி மருவு வோரும்
கூறுசற் பாத்திர மிருக்கமிகு தானமது
குணமிலார்க் கீய்ந்த பேரும்
கண்டுவரு புதியோரை நம்பியே பழையரைக்
கைவிட் டிருந்த பேருங்
கரிவாலை விட்டுநரி வால்பற்றி நதிநீர்
கடக்கின்ற மரியாதை காண்
வண்டடர் கடப்பமலர் மாலிகா பரணமணி
மார்பனே யருளாள னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

96. நல்லோர் முறைமை

கூடியே சோதரர்கள் வாழ்தலா லுந்தகு
குழந்தைபல பெறுத லாலுங்
குணமாக வேபிச்சை யிட்டுணகை யாலுங்
கொடும்பிதிர்க் கிடுத லாலுந்
தேடியே தெய்வங்க ளுக்கீத லாலுந்
தியாகங் கொடுத்த லாலுஞ்
சிறியோர்கள் செய்திடும் பிழையைப் பொறுத்துச்
சினத்தைத் தவிர்த்த லாலும்

காடியே தாழ்வாய் வணங்கிடுத லாலுமிக
நல்வார்த்தை சொல்ல லாலு
நன்மையே தருமலாற் றூழ்ச்சி வாராவிவை
நல்லோர்கள் செயு முறைமைகாண்
வாடிமன நொந்துதமிழ் சொன்னநக் கீரன்முன்
வந்துதவி செய்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

97. அடைக்கலங் காத்தல்

அஞ்சலெனு நாயினுட றருமன் சுமந்துமுன்
னாற்றைக் கடத்து வித்தா
னடைக்கல மெனுங்கயற் காகநெடு மாலுட
னருச்சுனன் சமர்புரிந் தான்
தஞ்சமென வந்திடு புறாவுக்கு முன்சிபி
சரீரந் தனைக் கொடுத்தான்
றடமலைச் சிறகரிந் ததனைமுன் காக்கத்
ததீசிமுது கென்பளித் தான்
இன்சொலுட னேபூத தயவுடைய ராயினோ
ரெவருக்கு மாபத்தி லே
யினியதஞ் சீவனை விடுத்தாகி லுங்காத்
திரங்கி ரக்ஷிப்ப ரன்றோ
வஞ்சகிர வுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன்
வளர்சூர னுடல்கீண்ட வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

98. யோக்கியா யோக்கியம்

பாலினொடு தேன்வந்து சேரில்ருசி யதிகமாம்
பருகுநீர் சேரிலென்னும்
பவளத்தி னிடைமுத்தை வைத்திடிற் சோபிதம்
படிகமணி நோக்கி லென்னும்
மேலினிய மன்னர்பால் யானைசேர் வதுகனதை
மேஷமது சேரி லென்னும்

மிக்கான தங்கத்தி னவமணி யுறிற்பெருமை
வெண்கல் லழுத்தி லென்றும்
வாலிப மினூர்களுட னிளையோர்கள் சேரினலம்
வளைகிழவர் சேரி லென்றும்
மருவுநல் லோரிடம் பெரியோர் வரிற்பிரியம்
வருகயவர் சேரி லென்றும்
மாலிகை தரித்தமணி மார்பனே தெய்வானை
வள்ளிக்கு வாய்த்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

99. பெரியோ ரியல்பு

அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்ற
லாபத்தின் வந்த பேருக்
கபயங் கொடுத்திடுத னல்லினஞ் சேர்ந்திடுத
லாசிரியன் வழி நின்றவன்
சொன்னமொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை
துணையடி யருச்சனை செயல்
சோம்பலில் லாமலுயிர் போகினும் 'வாய்மைமொழி
தொல்புவியி னாட்டி யிடுதல்
மன்னரை சேர்ந்தொழுகல் கற்புடைய மனைவியொடு
வைகினுந் தாமரை யிலை
மருவுநீ ரெனவுறாத விவையெலா மேலவர்த
மாண்பென் றுரைப்ப ரன்றோ
வன்னமயின் மேலிவர்ந் திவ்வுலகை யொருநொடியில்
வலமாக வந்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

100. நூலின் பயன்

வன்னமயி லேறிவரு வேலா யுதக்கடவுள்
மலைமே லுகந்த முருகன்
வள்ளிக் கொடிக்கினிய வேங்கைமர மாகினோன்
வானவர்கள் சேனாபதி

கன்னன்மொழி யுமையா டிருப்புதல்வ னரன்மகன்
கங்கைபெற் றருள் புத்திரன்
கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகக்
கடவுளா யினன் குடியி ருனை
பன்னரிய புல்வயலில் வாலகும ரேசர்மேற்
பரிந்துகுரு பாத தாசன்
பாங்கான தமிழாசி ரியவிருத் தத்தினறை
பாடலொரு நூறு நாடி
ன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர்
நாடொறுங் கற்ற பேர்கள்
ஞானயோ கம்பெறுவர் பதவியா வும்பெறுவர்
நன்முத்தி யும் பெறுவ ரே.

குமரேச சதகம்—முற்றிற்று.

எமது வெளியீடுகள்

நீதி நூல்கள்

(மூலமும்-உரையும்)

1.	ஆத்தி சூடி	0—2—
2.	கொன்றைவேந்தன்	0—2—
3.	மூதுரை (வாக்குண்டாம்)	0—2—
4.	உலகநீதி	0—2—
5.	வெற்றிவேற்கை	0—2—
6.	நல்வழி	0—3—
7.	குமரேச சதகம்	0—5—
8.	விவேகசிந்தாமணி	0—6—

விவேகாநந்தா அச்சுக்கூடம்

கல்வி நூற் பதிப்பகம்

மதுரை